# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை
# கிருஷ்ணகிரி மாவட்டம்

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி, B.Com., LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No. 02 of 2025 in O.S.No. 39 of 2025**
**CNR.No.TNKI13-000059-2025**

சின்னசாமி ...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. புவனேஷ்வரி
2. திருநாவுக்கரசு ...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைமனுவானது 12.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. வடிவேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. M. தண்டபாணி மற்றும் செல்வி. L. சௌமியா, அவர்களும் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினராகக் கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்:

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை XXXIX விதி 1 சி.பி.சி–ன் கீழ் தாவாவில் இறுதி தீர்வு ஏற்படும் வரை மனுதாரரின் நிம்மதியான சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எந்தவகையிலும் ஆக்கிரமிப்பு செய்து தடை இடைஞ்சல்கள் செய்யாத படிக்கு ஒரு தற்காலிகத்தடை உத்தரவு வழங்கி உத்தரவு செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுஉரை சுருக்கம்:**

2(i). மனுவில் மனுதாரர், மேற்படி வழக்கில் வாதி. மேற்படி வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவின் பிராதினை இந்த பிரமாண பத்திரத்தின் ஒரு அங்கமாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறார். மனு சொத்தானது மனுதாரருக்கு பூர்வீகமாக பாத்திப்பட்டு மனுதாரரின் சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வரும் சொத்தாகும். மேற்படி சொத்தினை மனுதாரர் மிகுந்த பொருட்செலவு செய்தும், உடல் உழைப்பு செய்தும் தாவா சொத்தினை சமன் செய்து தன் சொந்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். மனுதாரரின் அனுபவ சுவாதினத்தை அனுசரித்து அவரது பெயரில் உப்பாரப்பட்டி வருவாய் கிராம பட்டா எண். 69 படிக்கு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் தாவா சொத்தில் கால பயிர்களை முறையாக செய்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளையும் செலுத்தி மனுதாரரின் சொந்த சுவாதீன அனுபவத்தில் யாருடைய இடையூறுமின்றி இன்றுவரை அனுபவித்து வருகிறார்.

2(ii). மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பட்டா எண்.69-ல் பல சர்வே எண்கள் இருந்து வருகிறது. அதில் சர்வே எண்.117/11 வழக்கு சர்வே எண் சொத்தாகும். மனு சர்வே எண்.117/11 வாதியை தவிர வேறு எவருக்கும் எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் இல்லை. எதிர்மனுதாரர்கள் மனு சொத்திற்கு முற்றிலும் 3-ம் தரப்பினர்கள் ஆவார்கள். 1-ம் எதிர்மனுதாரருக்கு உப்பாரப்பட்டி பட்டா எண்.374-ல் சர்வே எண்.117/5, புஞ்சை விஸ்தீரணம் 0.17.50, தீர்வை 0.54 ஏக்கர் 0.43 செண்ட் சொத்து 1-ம் எதிர்மனுதாரரின் பெயரில் இருந்து வருகிறது. மனுதாரரின் சொத்திற்கு

அருகில் சர்வே எண்.117/12-ல் புஞ்சை விஸ்தீரணம் 0.25 செண்ட் கொண்ட நிலமும், கிணறு ஒன்றும் 1-ம் பிரதிவாதியின் கணவர் வேலுசாமி என்பவர் பெயரில் இருந்து வருகிறது.

2(iii). மனுதாரருக்கு 90 வயதுக்கு மேல் கடந்த நிலையில், மனுதாரரின் 4 ஆண்பிள்ளைகளும் திருமணம் ஆகி அவரவர்கள் தனியாக பிரிந்து சென்றுவிட்டதால் மனுதாரரை பார்த்துக்கொள்ள யாரும் இல்லாத நிலையில் யாருடைய உதவியும் இன்றி இருந்து வரும் நிலையில், சமீபத்தில் மனுதாரரின் மனைவியும் இறந்துவிட்டதால் மனுதாரர் தற்போது தனியாக யாருடைய ஆதாரவும் இல்லாமல் இருந்து வருவதை சாதகமாக்கிக்கொண்ட எதிர்மனுதாரர்கள் மனுதாரர் ஊரில் இல்லாத நேரத்தில் 1-ம் எதிர்மனுதாரர் பெயரில் இருந்துவரும் விவசாய நிலமானது புஞ்சை நிலம் என்பதால் தண்ணீர் வசதிக்காக வேண்டி 1-ம் எதிர்மனுதாரரின் கணவர் நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து, தண்ணீர் எடுத்து செல்ல வேண்டி சர்வே எண்.117/12-ல் இருந்து மனுதாரரின் நிலத்தின் வழியாக 1-ம் எதிர்மனுதாரரின் சர்வே எண்.117/5 நிலத்திற்கு, மனுதாரர் ஊரில் இல்லாத நேரத்தில், மனுதாரரின் நிலத்திற்கு அடியில் JCB உதவியுடன் சுமார் 3 அடி ஆழத்தில் PVC பைப்லைன்களை அமைத்துவிட்டனர்.

2(iv). இதனை அறிந்த மனுதாரர் எதிர்மனுதாரர்களிடம் கேட்டதற்கு முறையாக பதில் ஏதும் கூறாமல் 1-ம் எதிர்மனுதாரர், தன் மகனான 2-ம் எதிர்மனுதாரரை தூண்டிவிட்டு கை, கால்களை உடைத்துவிடுவேன் என பேசுவதும், உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என மிரட்டி வருகின்றனர். இதுகுறித்து மனுதாரர் ஊர்பொதுவர்களிடம் கூறி

பஞ்சாயத்து பேசியும் எதிர்மனுதாரர்கள் எந்தவித பஞ்சாயத்திற்கும் உடன்படாமலும், PVC பைப்களை அகற்றாமலும் இருந்து வருகிறார்கள். அதனால் மனுதாரர் எதிர்மனுதாரர்களின் அராஜக செயல் குறித்து வழக்கறிஞர் மூலம் கடந்த 15.04.2025-ம் தேதியில் சட்ட அறிவிப்பு ஒன்றினை அனுப்பினார். சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்ட 1-ம் எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு அனுப்பாமலும், மனு சொத்தில் உள்ள பைப்களை அகற்றாமலும் இருந்து வருகிறார்கள். மேற்படி எதிர்மனுதாரர்களின் அராஜக செயல் குறித்து காவல்நிலையத்தில் புகார் செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனுதாரர் ஊர்பொதுவர்கள் துணையுடன் தாவா சொத்தில் உள்ள பைப்லைன்களை அகற்றியேதீருவேன் என்று கூறியதால் ஆத்திரம் அடைந்த எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் சுவாதீனத்திற்கு தடையிடஞ்சல் செய்தேதீருவோம் என்று கூறி மிரட்டி வருகிறார்கள்.

2(v). மேற்படி எதிர்மனுதாரர்கள் சொன்னதை செய்யும் வல்லமை படைத்தவர்கள் என்பதால் மனுதாரரின் தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள் அமைத்துள்ள PVC பைப்லைனை அகற்றியும், நிலத்தை மறுசீரமைத்து தரக்கோரி செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும், மேலும் பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ அத்துமீறி நுழைந்து இடையூறு ஏற்படுத்தா வண்ணம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். எனவே தாவாவில் இறுதி தீர்வு ஏற்படும் வரை மனுதாரரின் நிம்மதியான சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எந்தவகையிலும் ஆக்கிரமிப்பு செய்து தடை

இடைஞ்சல்கள் செய்யாத படிக்கு ஒரு தற்காலிகத்தடை உத்தரவு வழங்கி உத்தரவு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாமை:**

3(i). எதிர்மனுதாரர்களுக்கு எதிருரை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததால் 10.02.2026 தேதியில் தோன்றா தரப்பினர்களாகக் கருதப்பட்டுள்ளனர்.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

4(i). இம்மனுவில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**5. சாட்சியம்:**

5(i). இம்மனுவிற்கு மனுதாரர் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்னிடப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

**விவாதம்:**

6. மனுதாரர் / வாதி இந்த மனுவை அசல் வழக்கில் தீர்ப்பாகும்வரை தாவா சொத்தில் வாதியின் சுவாதீனத்திற்கு பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ எவ்வகையிலும் ஆக்கிரமிப்பு செய்து தடை இடைஞ்சல் செய்யாதபடிக்குஒரு தற்காலிக தடை உத்தரவு வழங்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரரின் வழக்குப்படி மனு சொத்து மனுதாரருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு தனது பெயரில் பட்டா எண். 69 படி

பட்டா வழங்கப்பட்டுள்ளதாக கூறி மனுதாரர் பெயரில் உள்ள பட்டா ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். மேற்படி பட்டாவில் மனு சொத்தானது மனுதாரர் பெயரில் தனி பட்டா வழங்கப்பட்டுள்ளதாக அறிந்துகொள்ள முடிகிறது.

7. மனு சொத்தில் மனுதாரர் நிம்மதியான சுவாதீனத்தில் இருந்து வருகிறார். எதிர்மனுதாரர்கள் மனு சொத்திற்கு மூன்றாம் நபர்கள், அருகில் நிலத்தை உடையவர்கள். எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கிணற்றிலிருந்து அக்கிரமமான முறையில் மனுதாரரின் மனு சொத்து வழியாக JCB வைத்து மூன்று அடி ஆழத்தின் குழி நோண்டி பைப் லைன் அமைத்துவிட்டார்கள். அதை மனுதாரர் அகற்ற கோரி கடந்த 15.04.2015 தேதியில் சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்பும் அவர்கள் அகற்றிக்கொள்ளவில்லை என்று கூறி மனு சொத்தின் வழியாக பைப்லைன் அமைத்ததை காட்டுவதற்காக புகைப்படம் ஒன்றை ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்துள்ளார். மேலும் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்துள்ளார். பிரதிவாதி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்துள்ளார். மேற்படி சட்டவிரோத செயல் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாக கூறி ம.சா.ஆ.9 ஆக புகார் நகல் ஒன்றை குறியீடு செய்துள்ளார்.

8. மேற்படி ஆவணங்களின்படி மனு சொத்தில் பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட நிலங்களுக்கு பைப்லைன் அமைக்க மனு சொத்தின் வழியாக அக்கிரமமாக பைப்லைன் அமைத்துவிட்டார்கள் என்றும், அருகாமையில் உள்ள பிரதிவாதிகளின் நிலங்களை

காட்டுவதற்காக 1-ம் பிரதிவாதி பெயரில் உள்ள பாட்டா ம.சா.ஆ.2 ஆகவும் 1-ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ள பட்டா ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்துள்ளார். மனு சொத்துக்கள் தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கு தான் கந்தாயம் செலுத்தி வருவதாக கந்தாய ரசீது ம.சா.ஆ.8 ஆகவும், மனுதாரர் மனு சொத்தை சுவாதீனம் செய்து வருவதை காட்டுவதற்காக ம.சா.ஆ.10 அடங்கல் ஆவணமும் குறியீடு செய்துள்ளார். மேற்படி ம.சா.ஆ.2 ஆன 1-ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சர்வே எண்.117/5 நிலத்தில் இருந்து சர்வே எண். 117/12-க்கு செல்வதற்காக மனு சொத்தின் வழியாக பைப்லைன் அமைத்துவிட்டார்கள் என்று காட்டுவதற்காக ம.சா.ஆ.5 புலவரைபடம் தாக்கல் செய்துள்ளார்.

9. மேற்படி புல வரைபடத்ததின்படி சர்வே எண். 117/5-க்கும் சர்வே எண். 117/12-க்கும் இடையில் சர்வே எண். 117/6, 8, 9, 11 ஆகியவைகள் உள்ளது. மேற்படி மனு சொத்தில் எதிர்மனுதாரர்களுக்கு பைப்லைன் அமைக்க எந்தவித உரிமையும் இல்லை. ஆனால் சட்டவிரோதமாக அடைத்துவிட்டார்கள் என்று கூறி அதை அகற்ற வேண்டும் என்றும், மனு சொத்தில் மனுதாரரின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும், மனுதாரரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் வயதானவர் என்பதால் எதிர்மனுதாரர்கள் சட்டவிரோதமாக மனு சொத்தில் மனுதாரரின் சுவாதீனத்திற்கு தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்கள். அவர்கள் இடையூறை தடை செய்யப்பட வேண்டும் என்று இடைக்கால உறுத்துக் கட்டளை கோரியும் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்கள் தரப்பில்

ஆட்சேபணை செய்ய போதுமான அவகாசம் வழங்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினார்களாகக் கருதப்பட்டுள்ளார்கள்.

10. இந்நிலையில் மனுதாரர் கூறிய சங்கதிகள் உண்மையென கருதி மனு சொத்தில் மனுதாரருக்கு பாத்தியப்பட்டு அவர் சுவாதீனத்தில் இருந்துவருகிறார் என்று போதுமான முகாந்திரம் உள்ளதாலும் மனு சொத்தில் மனுதாரரின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்தால் அவர் வயதான காலத்தில் மனு சொத்தை அனுபவம் செய்வதில் சிரமம் ஏற்படும். அது ஈடு செய்ய முடியாத இழப்பாக மனுதாரருக்கு அமையும் என்ற சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிர்மனுதார்கள் தரப்பில் எந்தவித ஆட்சேபணையும் செய்யாததால் சமநிலை மனுதாரர் வசமே உள்ளது என்று கருதி மனுதாரர் கோரியவாறு தாவா தீர்ப்பு ஏற்படும்வரை மனு சொத்தில் மனுதாரரின் சுவாதீனத்ததிற்கு எதிர்மனுதாரர்கள் எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று கோரும் இடைக்கால உறுத்துக் கட்டளை மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு அனுமதிக்கப்பட்டு தாவா தீர்ப்பாகும்வரை மனு சொத்தில் மனுதாரரின் நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவிடப்படுகிறது. மனு செலவுத்தொகைகள் மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை

**இணைப்பு**

**மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:**

| Exhibit | Date | Document | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 04.06.2025 | பட்டா எண். 69–க்கான கணினி பட்டா | கணினி நகல் |
| ம.சா.ஆ.2 | 05.06.2025 | பட்டா எண். 374–க்கான கணினி பட்டா | கணினி நகல் |
| ம.சா.ஆ.3 | 05.06.2025 | பட்டா எண். 644–க்கான கணினி பட்டா | கணினி நகல் |
| ம.சா.ஆ.4 | -- | PVC பைப்லைன் புகைப்படம் | அசல் |
| ம.சா.ஆ.5 | 23.10.2017 | சர்வே எண்.117–ன் புல வரைபடம் | கணினி நகல் |
| ம.சா.ஆ.6 | 15.04.2025 | சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| ம.சா.ஆ.7 | -- | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| ம.சா.ஆ.8 | 21.01.2025 | கந்தாய ரசீது | அசல் |
| ம.சா.ஆ.9 | -- | காவல்நிலையத்தில் கொடுத்த புகார் | நகல் |
| ம.சா.ஆ.10 | -- | அடங்கல் | சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
**ஊத்தங்கரை**